அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 04/2006(II)

எனது இலக்கம்: EST-3/DICIP/06/0195
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.03.27

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**2013.10.31 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 04/2006(I) இன் மூலம் 2006.02.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 04/2006 இற்கு ஏற்ப மேன்முறையீடுகளை முன்வைப்பதற்காக வழங்கப்பட்ட கால எல்லையினை நீடித்தல்**

மேற்கூறப்பட்ட விடயம் தொடர்பாக பிரசுரிக்கப்பட்ட 2006.02.16 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2006 மற்றும் 2013.10.31 ஆந் திகதி, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2006(I) மற்றும் 2013.12.06 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் 04/2013 இன் பால் உமது கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

02. 1983 ஜூலை மாதத்துக்கு உடன்முன்னரான மற்றும் அதற்குப் பின்னர் 2009.05.18 ஆந் திகதி வரை நாட்டில் நிலவிய மோசமான நிலைமைகளின் காரணமாக தொழில் இழந்தவர்களுக்கு அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2006(I) இல் 02 ஆம் பந்தியின் மூலம் மேன்முறையீடு செய்வதற்கு வழங்கப்பட்ட காலம் 2017.12.31 ஆந் திகதி வரை நீடிப்பதற்கு 2017.02.21 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

03. அதற்கிணங்க, அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 04/2006 அல்லது 04/2006(I) இன் ஏற்பாடுகளுக்கு அமைய காலம் முடிவுற்றதன் காரணமாக மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கு முடியாமற் செல்லல் அல்லது சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டின் காலம் கடந்திருத்தல் காரணமாக நிராகரிக்கப்பட்ட மேன்முறையீட்டாளர்களின் கோரிக்கைகள் மீள கவனத்திற் கொண்டுவர முடியும் என்பதோடு, மேற்குறிப்பிட்ட முதற் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட சுற்றறிக்கைகளின் ஏனைய ஏற்பாடுகள் தொடர்ந்தும் அவ்வாறே வலுவிலிருக்கும்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு